திண்டுக்கல் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்:முனைவர்.ச செந்திவேல் முருகன்.
ஒ.மு.எண்.99/அ1/2021 நாள். /01/2021

பொருள்- தமிழ்நாடு அமைச்சுப்பணி-பள்ளிக்கல்வித் துறை-இளநிலை உதவியாளர் நேரடி நியமனம்-தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் (தொகுதி IV) மூலம் பணி அமர்வு-இளநிலை உதவியாளர்களுக்கு இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல்-சார்பு

பார்வை- 1.அரசாணை (நிலை) எண்.101 பள்ளிக்கல்வித் (பட்ஜெட்-1) துறை நாள்.18.05.2018

2.தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க. எண் 195 / அ4/ இ1/ 2019 நாள்: 23/02/2019

3.மதுரை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முளைகள் ந.க. எண் 8675 /அ2/2020 நாள் 22-12-2020

---

தமிழ்நாடு அமைச்சுப்பணியில் அரசு பணியாளர் தேர்வாணையம் (தொகுதி IV) மூலம் பணியமர்வு செய்யப்பட்ட கீழ்காணும் பட்டியலில் உள்ள இளநிலை உதவியாளர் அவர்தம் பெயருக்கெதிரில் கலம்(5)ல் குறிப்பிடப்பட்டுள்ள தேதி முதல் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்க பார்வை (3)ல் காணும் கடிதம் மூலம் பரிந்துரை செய்து பெறப்பட்டுள்ளது.

| வ.எ. | பெயர்/பதவி திரு/திருமதி/ செல்வி | முதன்முதலில் பணியேற்ற அலுவலகம் / பள்ளி | தற்போது பணிபுரியும் பள்ளி / அலுவலகம் | இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிவரன்முறைப் படுத்தப்படும் நாள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | து. உஷா ராணி இளநிலை உதவியாளர் | அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, வடமதுரை வேடசந்தூர் கல்வி மாவட்டம் | வட்டாரக் கல்வி அலுவலகம், கொட்டாம்பட்டி, மேலூர் கல்வி மாவட்டம் | 28-02-2019 முற்பகல் |

அன்னார் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என சார்ந்த வட்டாரக் கல்வி அலுவலர் தெரிவித்துள்ளார்கள்.

எனவே மேலே பட்டியலில் இடம் பெற்றுள்ள இளநிலை உதவியாளர் அவர்தம் பெயருக்கெதிரே கலம்(5)ல் குறிப்பிட்டுள்ள இளநிலை உதவியாளர் பணியில் பணியேற்ற நாள் 28-02-2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் கீழ்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

1) மேற்படி பணியாளர் இளநிலை உதவியாளர் பதவியில் முதல் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண் பருவம் முடிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

2) தகுதிகாண் பருவ காலத்தில் மேற்படி பணியாளர் தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் மற்றும் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் இளநிலை உதவியாளருக்கான அடிப்படைப் பயிற்சியில் கலந்து தேர்ச்சி பெறல் வேண்டும்.

3) மேற்படி பணியாளர்களது பணிவரன்முறை குறித்த பதிவுகள் அன்னாரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டுமென சார்ந்த வட்டாரக் கல்வி அலுவலர் பணிக்கப்படுகிறார்

இணைப்பு-அசல் பணிப்பதிவேடு

19/02/21

முதன்மைக்கல்விஅலுவலர்
திண்டுக்கல்

2.2.21

பெறுநர்: சம்மந்தப்பட்ட பணியாளர் (உரிய வழியாக)

நகல்-(மின்னஞ்சலில்)

1.முதன்மைக் கல்வி அலுவலர், மதுரை அன்புடன் அனுப்பப்படுகிறது

2.மாவட்டக் கல்வி அலுவலர்கள் திண்டுக்கல் / மேலூர்

3.வட்டாரக் கல்வி அலுவலர் கொட்டாம்பட்டி